(8) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1971.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ் நாடு 1971ஆம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1971) பேரவையின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

(7) அரசினர் சட்ட முன்வடிவங்கள்—தொடர்ச்சி.

(எ) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1971)

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, "தமிழ் நாடு 1971-ம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாம் திருத்த சட்ட முன் வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1971) பேரவையின் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இது பற்றி ஒரு சிறு விளக்கம் தர விரும்புகிறேன். பேரவைத் தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவு மூன்று மாதத்திற்கு முன்பு கொண்டு வரப்பட்டு ஒரு நீடிப்பைப் பெற்றது. இப்போது ஒரு ஆண்டுகாலமாக நீடிக்கவேண்டும் என்ற கோரிக்கையை பேரவை யின் முன் வைக்கிறேன். இதைக் கொண்டு வருவதற்குக் காரணம் அப்போது உள்துறைச் செயலாளர் அவர்கள் தலைமையில் ஒரு குழு நிறுவப்பட்டு அது பல நல்ல காரியங்களைச் செய்து ஒரு அறிக்கையை இவ்வரசுக்கு அனுப்பியிருக்கிறது. அது பலரிடம் கேட்டிறிந்த யோசனைகளை இவ்வரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறது. அவற்றை அரசு பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறது. அவற்றில் பல சிக்கல்கள் இருப்பதால் அவற்றையெல்லாம் பரிசீலித்து சட்ட பூர்வமாக ஆக்குவதற்குக் காலம் தேவைப்படுவதால் இதை ஒரு ஆண்டுகாலம் நீடிக்கவேண்டும் என்று கோரப்படுகிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை. இதில் வேறு பிரச்சனைகள் எதுவும் இல்லை. எனவே இதைப் பேரவையின் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் வேண்டுகின்றேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த மசோதாவைக் கொண்டு வந்தது சரியில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். காரணம் சென்ற தொடரில் இது வரும்போது எப்படியும் இந்த பட்ஜெட்

---

* ......19—7—1971-ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.